**கவனிக்க.-** *14.12.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1790 - 2012 දෙසැම්බර් මස 21 වැනි සිකුරාදා - 2012.12.21**

*1790 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1610 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1610 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, சனவரி மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, தை மாதம் 22 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2012, மார்கழி 04.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | உடுநுவர | உடுநுவர-யட்டிநுவர பிரிவில் பிலிமத்தலாவ பகுதியில் மேலதிக விவாகப் (கண்டி/ பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |

12-582

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் சமுர்த்தி முகாமையாளர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2012 (2013)

1.0 இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் சமுர்த்தி முகாமையாளர்களுக்கான I வது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2013, மாச்சு மாதத்தில் நடாத்தப்படும்.

2.0 **பரீட்சை முறையும் பாடத்திட்டமும்**.- இந்த வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையானது கீழ்க்குறிப்பிடப்படும் பாடங்கள் உள்ள டங்கிய வினாப்பத்திரங்களை கொண்டதாகும். ஒரு வினாப்பத்திரத்திற்கு 3 மணித்தியாலங்கள் வீதம் வழங்கப்படும். ஒரு வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகள் வீதம் வழங்கப்படும் என்பதுடன் தேர்வடையும் பொருட்டு தேவைப்படும் ஆகக்குறைந்த புள்ளிகள் 40 ஆகும். சகல பாடங்களுக்கும் ஒரே தவணையிலோ அல்லது பல தவணைகளிலோ அமரும் பொருட்டு உத்தியோகத்தர்களுக்கு அனுமதியுண்டு.

*2.1* ***முதலாவது வினாப்பத்திரம்*** *- பாட இலக்கம் 1 - பொருளாதார அபிவிருத்தி, வணிக மற்றும் வங்கி நடவடிக்கைகள் :*

(i) பொருளாதார அபிவிருத்தி
(ii) வணிக மற்றும் வங்கி நடவடிக்கைகள்

*2.2* ***இரண்டாவது வினாப்பத்திரம்*** *- பாட இலக்கம் 2 - தாபனக் கோவை, நிதிப்பிரமாணம் மற்றும் அலுவலக முறைமை :*

(i) *அலுவலக முறைமை :*
(அலுவலக முறைமையின் முக்கியத்துவம், கோட்பாடுகள், கிடைக்கின்ற கடிதங்கள் மற்றும் வெளியே அனுப்பப்படும் கடிதங்கள் தொடர்பில் செயற்படுதல், ஆவணங்களில் பதிவுகளை மேற்கொள்ளுதல், பொது மக்களுடன் செயற்படுவது தொடர்பிலான விளக்கங்கள்)

(ii) *தாபனக்கோவை* - (I, II, III, IV, VII, XII, XIV, XV, XXV (அத்தியாயங்கள்) )

*நிதிப்பிரமாணங்கள்* - (I, II, III, XIII (அத்தியாயங்கள்))

3. இப்பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மாத்திரம் நடைபெறும். இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இந்த அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை சுயமாக தயாரித்துக்கொள்ளல் வேண்டும். A4 அளவிலான தாளின் இரு பக்கங்களில் விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படவேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப் படிவங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பப் படிவத்தின் தலைப்பு இலக்கம் 1.0 தொடக்கம் 6.0 வரை முதலாம் பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாம் பக்கத்திலும் அமையும் விதத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதற்குரிய தகவல்களை தங்களது கையெழுத்தினாலேயே தெளிவாக பூரணப் படுத்துதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ற விதத்தில் அமையாத விண்ணப்பப்படிவங்களும் பூரணமில்லாத விதத்தில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அவ் விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியொன்றினை தங்களிடம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும்.

4. விண்ணப்பப்படிவங்களை தங்களது பிரிவுத் தலைவரின் ஊடாக (மாவட்டச் செயலாளர்/பிரதேச செயலாளர்) பிரிவுகளில் இணைக்கப் பட்டிருப்பின் அதனை (மாவட்ட செயலாளர்/மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்/பிரதேச செயலாளர்கள்/பிரதி சமுர்த்தி பணிப்பாளர்கள் ஊடாக) 2013.01.22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் ''பணிப்பாளர் நாயகம், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை, 4 ஆவது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை'' என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்ட வுடனேயே அது தொடர்பில் பத்திரிகை அறிவித்தல் ஒன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கழிந்ததன் பின்னர் அனுமதி அட்டை கிடைக்காவிடின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை சமுர்த்தி அதிகாரசபைக்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடம் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியினையும், பதிவுசெய்த பற்றுச்சீட்டினையும் கொழும்புக்கு தூரமான பிரதேசம் ஒன்றாயின் அனுமதி அட்டையினை அனுப்பும் பொருட்டு தொலைநகல் இலக்கம் ஒன்றினையும் குறிப்பிட்டு உங்களது கோரிக்கைக் கடிதத்தினையும் இணைத்து வைத்து இலங்கை சமுர்த்தி அதிகார சபைக்கு அறிவிப்பது மிகப்பயனுள்ளதாகும்.

6. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பாடங்களுக்கும் மண்டப அதிபதி திருப்திப்படக்கூடிய வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(I) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(II) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட் அனுமதிப் பத்திரம்).

7. இப்பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் விடுவிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். அந்த சட்ட விதிகள் மீறப்பட்டால் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உள்ளாக வேண்டி வரும். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப் படுவது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகுதிகளை கொண்டுள்ளதற்கு அங்கீகாரமாக கருதலாகாது.

8. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பித்துள்ள சகலருக்கும் இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை அனுப்பப்படும் என்பதுடன் அவர்களுக்குத் தங்களது அலுவலகத் தலைவரினால் கடமை விடுமுறை வழங்கப்படல் வேண்டும். பரீட்சை நடைபெறும் தினத்தன்று தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொண்ட அனுமதி அட்டையை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

9. இந்த விதிமுறைகளுக்கு உட்படாத ஏதேனும் விடய மொன்றிருப்பின், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை பணிப்பாளர் சபையின் விருப்பத்தின் பிரகாரம் அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஆர். பீ. பி. திலகசிரி,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை,
4 ஆம் மாடி, ''செத்சிரிபாய'',
பத்தரமுல்லை.

**இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சமுர்த்தி முகாமையாளர்களுக்கான I ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2012 (2013)**

(அலுவலக உபயோகத்துக்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :-
சிங்களம் - 2, தமிழ் - 3 (உரிய கூட்டினுள் எழுதவும்)

1. பெயர் :-

1.1 முதலெழுத்துக்கள் இறுதியாக வரும் விதத்தில் முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-----.
உதா.: SILVA, A. B.

1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2. அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.2 அலுவலக முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

3. பால் (பெண்/ஆண்) :
பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4. விவாகமானவரா/விவாகமாகாதவரா :-
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

5. பிறந்த திகதி :

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தன்று வயது:

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

8. தற்போது வகிக்கும் பதவியும் தரமும் :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவை எனவும் விண்ணப்பித்துள்ள மொழியில் பரீட்சைக்குத் தோற்ற உரிமையுள்ளது எனவும் கூறிக்கொள்கின்றேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் பிறப்பிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு நான் இசைவதாகவும் அறிவித்துக் கொள்கின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
சமர்ப்பிக்கின்றேன்.

மேலுள்ள விபரங்களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிக்கு இப்பரீட்சையில் தோற்றுவதற்குத் தகுதியுள்ளது எனவும் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியுள்ளவர் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
பிரிவு/மாவட்டத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயரும் உத்தியோக முத்திரையும்.

திகதி :-----.

12-569/1

---

**இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் சமுர்த்தி முகாமையாளர்களுக்கான II ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2012 (2013)**

1. இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் V ஆம் மற்றும் VI ஆம் தர சமுர்த்தி முகாமையாளர்களுக்கான II ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2013, மாச்சு மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சையில் I ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் தேறிய சமுர்த்தி முகாமை யாளர்கள் தோற்ற முடியும்.

2. **பரீட்சை முறையும் பாடத்திட்டமும்**.- இந்த வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையானது 3 மணித்தியால வினாத்தாளைக் கொண்டதாகும். மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கையானது 100 ஆகும் என்பதுடன் சித்திபெறும் பொருட்டு பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் 40 ஆகும்.

இலங்கையின் கிராமிய மற்றும் பிரதேச அபிவிருத்திகள் உள்ளடங்கிய நிகழ்கால அபிவிருத்தி நடவடிக்கைகள், இலங்கையில் வணிக வங்கிகளும் நிதி நடவடிக்கைகளும், சமூக அபிவிருத்தி நடவடிக்கை களை மேம்படுத்துதல், வறுமை ஒழிப்பு, சமுர்த்தி வேலைத்திட்டத்தினை கட்டியெழுப்புதல், மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின்கீழ் கமநெகும வேலைத்திட்டம் உள்ளடங்கிய விண்ணப்பதாரிகளின் படைப்பாக்க ஆற்றலையும் தெளிவினையும் அளவை செய்து பார்ப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட ஒரு வினாத்தாளாகும்.

3. இப்பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மாத்திரம் நடைபெறும். இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணபப்பப்படிவமொன்று இந்த அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தயாரித்துக் கொள்ளல் வேண்டும். A4 அளவிலான தாள்களில் மட்டுமே விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பப் படிவத்தின் தலைப்பு இலக்கம் 1.0 தொடக்கம் 6.0 வரை முதலாம் பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாம் பக்கத்திலும் அமையும் விதத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதற்குரிய தகவல்களை தங்களது கையெழுத்தினாலேயே தெளிவாக பூரணப்படுத்துதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ற விதத்தில் அமையாத விண்ணப்பப்படிவங்களும் பூரணமில்லாத விதத்தில் தகவல்கள்

குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அவ்விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியொன்றினை தங்களிடம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது அங்கு தலைப்பு குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

4. விண்ணப்பப்படிவங்களை தங்களது பிரிவுத் தலைவரின் ஊடாக (மாவட்ட செயலாளர்/ பிரதேச செயலாளர் பிரிவுகளில் இணைக்கப்பட்டிருப்பின் அதனை மாவட்டச்செயலாளர்/மாவட்ட சமுர்த்திப்பணிப்பாளர்/பிரதேச செயலாளர்கள்/பிரதி சமுர்த்தி பணிப்பாளர்கள் ஊடாக) 2013.01.22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைகள் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடனேயே அது தொடர்பில் பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கழிந்ததன் பின்னர் அனுமதி அட்டை கிடைக்காவிடின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடம் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியினையும், பதிவுசெய்த பற்றுச் சீட்டினையும் கொழும்புக்கு தூரமான பிரதேசம் ஒன்றாயின் அனுமதி அட்டையினை அனுப்பும் பொருட்டு தொலைநகல் இலக்கம் ஒன்றினையும் குறிப்பிட்டு உங்களது கோரிக்கைக் கடிதத்தினையும் இணைத்து வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகப்பயனுள்ளதாகும்.

6. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பாடங்களுக்கும் மண்டப அதிபதி திருப்திப்படக்கூடிய வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(I) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(II) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு (பாஸ்போட் அனுமதிப் பத்திரம்).

7. இப்பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுவிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். அந்த சட்ட விதிகள் மீறப்பட்டால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உள்ளாக வேண்டி வரும். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்கு தோற்றுவ தற்கான தகுதிகளை கொண்டுள்ளதற்கு அங்கீகாரமாக கருதலாகாது.

8. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பித்துள்ள சகலருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை அனுப்பப்படும் என்பதுடன் அவர்களுக்குத் தங்களது அலுவலகத் தலைவரினால் கடமை விடுமுறை வழங்கப்படல் வேண்டும். பரீட்சை நடைபெறும் தினத்தன்று தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

9. இந்த விதிமுறைகளுக்கு உட்படாத ஏதேனும் விடயமொன்றிருப்பின், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை பணிப்பாளர் சபையின் விருப்பத்தின் பிரகாரம் அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஆர். பீ. பி. திலகசிரி,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை,
4 ஆம் மாடி, "செத்சிரிபாய",
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சமுர்த்தி முகாமையாளர்களுக்கான II ஆவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2012 (2013)**

**Efficiency bar Examination II for Samurdhi Managers of Authority of Sri Lanka - 2012 (2013)**

(அலுவலக உபயோகத்துக்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :-
சிங்களம் - 2, தமிழ் - 3 (உரிய கூட்டினுள் எழுதவும்)

1. பெயர் :-

1.1 முதலெழுத்துக்கள் இறுதியாக வரும் விதத்தில் முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
உதா.: SILVA, A. B.

1.2 முழுப்பெயர் :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

1.3 முழுப் பெயர் :-----.
(சிங்களத்தில்/தமிழில்)

2. நிரந்தர முகவரி :-----.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.1 நிரந்தர முகவரி : -----.
(சிங்களத்தில்/தமிழில்)

2.2 அலுவலக முகவரி :-----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு தபாலில் இடப்படும்)

3. (பெண்/ஆண்) :
பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4. விவாகமானவரா/விவாகமாகாதவரா? :-
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தன்று வயது:
வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

8. பதவியும் தரமும் :-----.

9. முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் தேறிய ஆண்டு : ☐☐☐☐

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவை எனவும் விண்ணப்பித்துள்ள மொழியில் பரீட்சைக்குத் தோற்ற உரிமையுள்ளது எனவும் கூறிக்கொள்கின்றேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு இசைவதாகவும் அறிவித்துக்கொள்கின்றேன்.

-----,
(விண்ணப்பதாரியின் கையொப்பம்)

திகதி :-----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

சமர்ப்பிக்கின்றேன்.

மேலுள்ள விபரங்களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிக்கு இப்பரீட்சையில் பரீட்சார்த்தியாகுவதற்குத் தகுதியுள்ளது எனவும் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியுள்ளவர் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
பிரிவு/மாவட்டத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயரும் உத்தியோக முத்திரையும்.

திகதி :-----.

12-569/2

---

## அரசாங்க சேவை ஆணைக்குழு

### இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013

இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமை பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 11.

1. இவ் அறிவித்தலில் "செயலாளர்" என்ற சொல், பொது நிர்வாக அமைச்சின் செயலாளரையும் "சேவை" என்ற சொல் இலங்கை கட்டடக் கலைஞர் சேவையையும் குறிக்கும்.

2. **ஆட்சேர்ப்பு முறை**.- எழுத்துப் பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் 40 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களில், பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் ஒழுங்குமுறைப்படி ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற சமமான தொகையினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

**பரீட்சை நடைபெறும் திகதி**.- இப்பரீட்சை 2013, மாச்சு மாதம் கொழும்பில் நடாத்தப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு அமைய இப்பரீட்சையை பிற்போடும் அல்லது இரத்துச்செய்யும் அதிகாரத்தைச் செயலாளர் கொண்டுள்ளார்.

3. நியமனம் வழங்கப்படும் அலுவலர்களின் எண்ணிக்கை, நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி என்பன அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கு இணங்கத் தீர்மானிக்கப்படும்.

4. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1995.09.12 ஆந் திகதிய 888/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட) கட்டடக் கலைஞர் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பிறகு செய்யப்படும் திருத்தங்களுக்கும் உட்பட்ட வகையில் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் சேவையின் வகுப்பு II தரம் II இற்கு நியமிக்கப்படுவர். அதற்கிணங்க இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். தகுதிகாண் காலம் 3 வருடங்களாகும். இம்மூன்று வருட காலப்பகுதியினுள் I ஆம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். அத்துடன் நியமனத் திகதியிலிருந்து 6 வருட காலப்பகுதியினுள் II ஆம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். மேலும் நியமனம் கிடைத்து 5 வருடங்கள் பூர்த்தியடைய முன்னர் 2007.05.28 ஆந் திகதிய 07/2007 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு இணங்க இரண்டாம் அரச கரும மொழியில் தேர்ச்சியடைதல் வேண்டும்.

4.1 தமக்கு வழங்கப்படும் பதவியை உரிய தினத்தில் பொறுப்பேற்கத் தவறும் மற்றும்/அல்லது நியமிக்கப்படும் பதவியொன்றை அல்லது நியமிக்கப்படும் பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்க மறுக்கும் அல்லது தட்டிக்கழிக்கும் விண்ணப்பதாரர்களின் நியமனத்தை இரத்துச் செய்யும் அதிகாரத்தை அரசாங்க சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது.

5. **கட்டமைப்பு மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- 2006.04.25 ஆந் திகதிய 06/2006 ஆம் பொது நிர்வாக சுற்றறிக்கையின் எஸ்.எல்.1-2006 சம்பளத் தொகுதிக்கு இணங்க, மாதாந்த சம்பள அளவுத்திட்டம்-

எஸ்எல்1-ரூ. 22,935-10X645-8X790-17X1,050-ரூ. 53,555.

இப்பரீட்சையின் மூலம் இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

6. **ஆரோக்கியமும் நடத்தையும்**.- பரீட்சார்த்தி சுகாதார ரீதியில் உரிய தகைமைகளைப் பெற்றுள்ளார் என்றும், சிறந்த நடத்தையுடையவர் என்றும் செயலாளர் திருப்தியடைதல் வேண்டும். அவர் சிறந்த கண் பார்வையுடையவராகவும் நாட்டின் எப்பாகத்திலும் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கான சிறந்த தேகாரோக்கியத்தைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் மருத்துவ பரிசோதனையொன்றுக்கு உட்படுத்தப்படுவர்.

7. **தகைமைகள்**.- இதற்குத் தோற்றும் பரீட்சார்த்தியொருவர்-

(i) இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்

(ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து கட்டடக் கலை தொடர்பான பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(அ) பட்டம் 2013.01.21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பயன்வலுப்பெறுவதாக இருத்தல் வேண்டும்.

(iii) 2013.01.21 ஆந் திகதியில் வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(iv) தற்போது அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமான பதவிகளை வகிக்கும் முழுமையான தொழிற்தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்களுக்கு உயர் வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.

(v) சிறந்த நடத்தையும் உரிய தேகாரோக்கியமும் கொண்டவர் களாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு அவசியமான தகைமைகள் அனைத்தையும் 2013.01.21 ஆந் திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000 ஆகும். அதனை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் மாவட்ட/பிரதேச செயலகமொன்றில் பரீட்சைத் திணைக்கள வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவுவைப்ப தற்காகச் செலுத்துதல் வேண்டும். மாவட்ட/பிரதேச செயலகமொன் றிலிருந்து பெறப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் ஒட்டுதல் வேண்டும். இக்கட்டணம் மீளளிப்புச் செய்யப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

9. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பங்கள் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக 8 1/2" X 12" (ஏ4) அளவிலான கடதாசிகளில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படுதல் வேண்டும். இல. 1.0 முதல் 2.11 வரையான இலக்கங்களில் அடங்கும் விடயங்கள் முதலாம் பக்கத்திலும் 2.12 முதல் 5.0 வரையான இலக்கங்களில் அடங்கும் விடயங்கள் இரண்டாம் பக்கத்திலும், எஞ்சிய பகுதி மூன்றாம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதை விண்ணப்ப தாரிகள் விசேடமாகக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும். விண்ணப் பங்களில் குறிப்பிடும் தகவல்களைத் தமது கையெழுத் துக்களில் தெளிவாக எழுதுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்திற்கு இணங்கிய தாகத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும். முழுமையாகத் தகவல்கள் வழங்கப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பத்தின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமைய முடியும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு இணங்கியதாக உள்ளனவா என்று விண்ணப்பதாரர்கள் சரிபார்த்துக்கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட முடியும்.

(ஆ) பரீட்சார்த்திகள் தாம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் மொழியிலேயே விண்ணப்பங்களை நிரப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாயரிக்கும்போது அதன் தலைப்பில் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்படுவது கட்டாயமாகும்.

(இ) பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை ''பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம் (ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை), பெலவத்தை, பத்தரமுல்லை'' என்ற முகவரிக்கு 2013.01.21 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013'' என்று தெளிவாக எழுதுதல் வேண்டும். உரிய திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**குறிப்பு**.- அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் உள்ள திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர்கள்/நிறுவனத் தலைவர்கள் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பங்கள் தொலைந்துபோதல், தாமதமாகக் கிடைத்தல் என்பன தொடர்பில் எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(உ) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப் பட்டதன் பின்னர் அது தொடர்பாக பத்திரிகை அறிவித்தல் ஒன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அவ் அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். உம்மிடமுள்ள விண்ணப்பத்தினதும் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் பிரதிகளையும், பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளியில் எனின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான தொலைநகல் (பெக்ஸ்) இலக்கமொன்றையும் குறிப்பிட்டு உங்கள் கோரிக்கையின் பிரதியொன்றை உங்களிடம் வைத்துக்கொண்டு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவது பயனுள்ளதாக அமையும்.

(ஊ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளிலுள்ள அதிகாரம்பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலர் ஒருவரினால் அல்லது ரூ. 2,40,360 இற்கு வருடாந்த அடிப்படைச் சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரசாங்க அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

10. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- (அ) விண்ணப்பங்கள் கிடைத்த அனைத்து ஆட்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை ஒப்படைத்தல் வேண்டும். தமது அனுமதி அட்டைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் என்பன தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாக அமையும்.

(ஆ) பரீட்சார்த்தியொருவர் தமக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் உரிய பரீட்சை இலக்கத்தின்கீழ் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் பரீட்சையின் முதல் நாளில், தமது கையொப்பங்களை உறுதிப்படுத்திய அனுமதி அட்டைகளை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்பற்றவேண்டிய சட்டத் தொகுதியொன்று இவ் அறிவித்தலின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறுமிடத்து அவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்பட வேண்டி ஏற்படும்.

(இ) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் நேரத்தில் காணப்பட்ட, விண்ணப்பதாரர்களின் சேவை நிலையமே, பரீட்சை தொடர்பான அனைத்து விடயங்களும் ஏற்புடையதாவதுடன் விண்ணப்பங்களை அனுப்பியதன் பின்னர் அது தொடர்பில் நிகழும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமை களைப் பூர்த்திசெய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது எனக் கருதுவதற்கான ஆதாரமாக அமைய மாட்டாது.

11. பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளம்.- தாம் தோற்றும் அனைத்துப் பாடங்களின்போதும், பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடியவாறு பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பது அவசியமாகும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

12. **பிழையான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை**.- பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்பட முடியும்.

பரீட்சார்த்தி சமர்ப்பித்துள்ள ஏதேனும் ஒரு விடயம் பொய்யானது என அறிந்த நிலையில் அவர் அதனைச் சமர்ப்பித்திருப்பின், அல்லது ஏதேனும் ஒரு விடயத்தை வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் சேவையிலிருந்து நீக்கப்பட முடியும்.

13. இவ் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழு அறிவுறுத்தல்களுக்கு இணங்க செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

14. பரீட்சை நடாத்தப்படும் முறை மற்றும் பரீட்சை மொழி மூலம்.- (அ) இப்பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் மொழிமூலங்களில் நடாத்தப்படும். பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்திகள் தாம் பட்டம்பெற்ற மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு**.- (i) மேலே (ஆ) இல் தகுதிவாய்ந்த பட்டம் என்பது 7 (ii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டத் தகைமையினைக் குறிக்கும்.

(ii) பரீட்சார்த்திகள் தாம் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து வினாக்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

(iii) தமது விண்ணப்பங்களில் குறிப்பிட்டுள்ள மொழி மூலங்களை மாற்றுவதற்கு விண்ணப்பதாரிகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

15. **எழுத்துப் பரீட்சை**.- பின்வரும் பாடங்களைக் கொண்டதாக எழுத்துப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

(1) நுண்ணறிவுச் சோதனை (காலம் : 1 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
(2) பொது அறிவு (காலம் : 2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

16. எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளில் அதிக புள்ளிகளைப் பெறுவோரின் ஒழுங்குமுறைப்படி நியமனத்திற்காகத் தெரிவுசெய்யப்படுவர். (நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகத் தெரிவுசெய்யப்படுவது தகைமைகளைப் பூர்த்திசெய்தமையாகக் கருதப்பட மாட்டாது.)

17. **பாடத்திட்டம்** :

(1) நுண்ணறிவுச் சோதனை (காலம் : 1 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்.- விண்ணப்பதாரர்களின் தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்யும் ஆற்றல், தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றை அளவிடும் நோக்கில் இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். "பல்தேர்வு மாதிரி மற்றும் சுருக்க விடை மாதிரி என்பவற்றின் அடிப்படையிலான 50 வினாக்களைக் கொண்டதாக இவ்வினாப்பத்திரம் அமையும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(2) பொது அறிவு (காலம் : 2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்.- இலங்கையின் அரசியல், சமூக, கலாசார, பொருளாதாரச் சூழல், தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நவீன விடயங்கள், தேசிய மற்றும் சர்வதேச விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்தி தொடர்பான அறிவைச் சோதிப்பதனை நோக்காகக் கொண்டதாக இவ்வினாப்பத்திரம் அமைந்திருக்கும். இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும். முதலாவது பகுதி 50 பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாகவும் இரண்டாவது பகுதி சுருக்க விடை வகையிலான 25 வினாக்களையும் கொண்டிருக்கும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2012.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்காக)

இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் வகுப்பு II இன் தரம் II இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை (2012)

Open Competitive Examination For Recruitment to Class II Grade II of Sri Lanka Architectural Service (2012)

1. மொழிமூலம் :
பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

* விண்ணப்பங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தில் நிரப்பப்படுதல் வேண்டும்.

2. தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துகளில், முதல் எழுத்துக்கள் பெயரின் இறுதியில் இடப்படுதல் வேண்டும்) :----.

உதாரணம் : SILVA, A.B

2.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) : ----.

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.4 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில், பரீட்சை அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்) : ----

2.5 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.6 தபால் நகரம் :----.

2.7 தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.8 பால் : ஆண் -0
பெண் -1

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

2.9 விவாகமானவர்/விவாகமாகாதவர்-
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2

2.10 இனம் : (சிங்களவர்-1, தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்-4, ஏனையோர்-5)

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

2.11 தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.12 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

2.13 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3. (i) பட்டம்பெற்ற திகதி :----. (இத்தகைமை இருக்கிறதா என்பதை அறிந்துகொள்வதற்கு 7 ஆம் பந்தியைத் தயவுசெய்து நன்றாக வாசித்துப் பார்க்கவும்) :-

(ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.

(iii) பதிவு இலக்கம் :----.

(iv) வெளிவாரி/உள்வாரி :----.

(v) பட்டம் :----.

(vi) பாடங்கள் :----.

(vii) வகுப்பும் :----.

(viii) மேல்/கீழ் :----.

(ix) பரீட்சை இலக்கம் :----.

(x) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் :----.

4. பணம் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை உரிய முறையில் ஒட்டுக.

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை உங்களிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.) |

5. **விண்ணப்பதாரரின் உறுதியுரை**.- இங்கு குறிப்பிடப்பட்ட தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் உட்பட்ட வகையில் உண்மையானவை என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட .......................... ஆம் இலக்கத்தைக் கொண்ட ...................................... ஆந் திகதிய பற்றுச்சீட்டினை இதில் ஒட்டியுள்ளேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சைச் சட்டதிட்டங்களுக்கு இணங்கச் செயற்படுவதற்கும், இப்பரீட்சையின் நிபந்தனைகளுக்கு இணங்க நான் தகுதியற்றவன் எனத் தெரியவருமிடத்து, பரீட்சைக்கு முன்னர் அல்லது அது நடைபெறும்போது அல்லது அதன் பின்னர் எனது பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்கு எடுக்கப்படும் யாதாயினும் தீர்மானங்களுடன் உடன்படுகின்றேன். மேலும், பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

6. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் (வர்த்தமானி அறிவித்தலின் 9(ஊ) இற்கு அமைவாக) :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் .......................... (முழுப்பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார்

என்றும், அதற்கான பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் ....................................... ஆந் திகதி எனது முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)
திகதி :----.

7. திணைக்களத் தலைவரின் உறுதியுரை (தனிப்பட்ட கோவைக்கு இணங்க).- இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ........................................................... என்பவர் ..................................................... ஆந் திகதிக்கு முன்னரான ஐந்து வருட காலத்தில் (சேவை அல்லது திணைக்களப் பரீட்சைகளில் சித்தியடைய வேண்டும் என்ற வேதனாதிகள் தவிர) அவருடைய வேதனாதிகள் அனைத்தையும் பெற்றுள்ளார் என்றும், அக்காலப்பகுதியில் செய்த தவறொன்றுக்காக (எச்சரித்தல் தவிர) ஏதேனும் ஒரு ஒழுக்காற்றுத் தண்டனை அவர் தொடர்பில் விதிக்கப் படவில்லை என்றும், இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப் பட்டுள்ள தகவல்கள், அறிக்கைகளின் மூலம் உண்மை யானவை என்று கண்டறியப்பட்டுள்ளன என்றும், குறித்த வர்த்தமானி அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்க அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஒட்டப் பட்டுள்ளது என்றும், அவர் எனது முன்னிலையில் இவ்விண்ணப்பத்தில் கையொப்பமிட்டார் என்றும், இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின்/அதிகாரம்பெற்ற
அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.
(உத்தியோக முத்திரையைப் பதிக்கவும்.)

12-607

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.